**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 132/2022

பெயர் : சத்தியமூர்த்தி (DW3)

த/க/பெ. :

தேதி : 14.03.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் நான் 2ம் பிரதிவாதி. நானும், 3ம்பிரதிவாதியும் சேர்ந்து தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் 3ம்பிரதிவாதியை எனக்கு முன்பாக பி.வா.சா.ஆ. 2 ஆக விசாரித்ததில் குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் ஒரே வழக்கறிஞர். முதல் பிரதிவாதி கார்த்திக்கேயன் என்ற வழக்கறிஞர் வைத்துள்ளார். 2005 ல் 100/1, 100/3, 98/13, 97/4 சி கியர ஒப்பந்தம் ஏற்பட்டது. என் பிரமாண வாக்குமூலத்தில் 97/4 சி காட்டபடவில்லை என்றால் சரியல்ல. மொத்தம் 12 மா, 45 குழி. மொத்த வீஸ்தீரணம் 1245 குழிக்கு ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்கிறேன். 98/13 ல் 100 குழி உள்ளது. 100/1, 100/3 விஸ்தீரணம் தெரியவில்லை. மேற்படி சர்வே எண்கள் சேர்த்து 1175 குழி தான் வருகிறது என்றாலும் வழக்கிற்காக 1245 குழி என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் பிரதிவாதியிடம் ரூபாய். 4,78,400/- ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டுள்ளோம். என்னிடம் காண்ப்பிக்கப்படும் பி.வா.சா.ஆ. 7 என்றால் ச ரிதான். அதில் வாதிகள் தரப்பினர்கள் இல்லை. கையெழுத்து போடவில்லை. ஒப்பந்தத்தை அனுசரித்து முழு தொகையையும் செலுத்தி விட்டேன். முதல் பிரதிவாதி எதிர் வழக்குரையில் பி.வா.சா.ஆ.7 2005 ல் ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும், அதன் படி 4,78,400/- ரூபாய் பெற்றுக்கொண்டதாகவும் சொல்லவில்லை சரிதான். பி.வா.சா. 7 வழக்கிற்காக ஏற்பட்ட ஆவணம் என்றாலும் உண்மையிலேயே ஏற்பட்டிருந்தால் முதல் பிரதிவாதி எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு இருந்திருப்பார் என்றாலும் சரியல்ல. பொதுவாக பத்திரங்களில் இருவர் சாட்சி கையெழுத்து போடவேண்டும் என்பது தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.7 ல் உள்ள 2 வது சாட்சி 3 வது பிரதிவாதி. அந்த கையெழுத்து வழக்கில் ஆவணம் தாக்கல் செய்யும் போது என்னால் ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தாய் தந்தையருக்கு சொந்தமானது என்றால்சரிதான். தாவா சொத்துக்களை பொருத்து

பதிவு பெற்ற ஆவணம் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் இல்லை. தாவா சொத்து வாதிகள், முதல் பிரதிவாதியின் பெற்றோர் இறந்த பின்னர் அது அவர்கள் மூவருக்கும் பொது சொத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ .7 ஆவணத்தில் அது பூர்வீகமாக சொந்தம் என்று சொல்லி உள்ளார் என்றாலும் வாங்கியதாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை பொருத்து முதல் பிரதிவாதி எந்த ஆவணமும் ஏற்படுத்திக் கொடுக்க வில்லை என்றாலும் பி.வா.சா.ஆ.7 வழக்கிற்காக நான் ஏற்படுத்திக் கொண்டது என்றாலும் சரியல்ல. மேற்படி தொகையை 2 பகுதியாக கொடுத்ததாக சொல்லலி உள்ளேன். ரூபாய் 3,08,400/- ஒரு தவணை 1,55,000/- ஒரு தவணை பாக்கி 15,000/- வீட்டில் வந்து வாங்கி சொன்றார். மேற்படி விபரத்தை எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை. எந்த தொகையும் அவர் வாங்க வில்லை என்றாலும் அவ்வாறு வாங்கியிருந்தால் எதிர்வழக்குரையில் சொல்லி இருப்பார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பொருத்து 3ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியுடன் ஒப்பந்தம் போட்டதாக சொல்லி உள்ளேன். 2005ல் போடப்பட்டது. இந்த விபரத்தை முதல் பிதரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. வழக்கிற்காக தான் நானும், 3ம்பிரதிவாதியும் 1990 மற்றும் 2005ல் முதல்பிரதிவாதி சில சொத்துக்கள் குறித்து ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. என் கட்சி முன்னுக்கு பின் முரணாக கட்சி எடுத்துள்ளதால் 3ம்பிரதிவாதியை முதலில் விசாரித்து விட்டு அதன் பின்னர் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை விற்க சொல்லி சுரேஷ் , பாலகிருஷ்ணனுக்கு கடிதம் போட்டதாக சொல்லி உள்ளேன். சுரேஷனின் அப்பாவிற்கு பாகம் இருப்பதால் கடிதம் அனுப்பினார். தாவா சொத்துக்களை வாதிகளும், முதல் பிரதிவாதியும் இதுநாள் வரை பாகம் பிரித்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இடத்தை விற்பனை செய்து பணமாக பெற்றுக்கொண்டார்கள். தாவா சொத்துக்களை விற்பனை செய்ய வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. கடிதம் தபால் கொடுத்துள்ளார்கள். கடிதத்தை காட்டி சொத்தை விற்க முடியுமா என்றால் கடித்தை காட்டிதான் விற்பனை செய்தார். கடிதம் என்னிடம் தான் உள்ளது. இந்த விபரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. வழக்கிற்காக தான் கடிதம் கொடுத்தார்கள் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 2020ல் நானும், 2ம் பிரதிவாதியும் ஏதோ ஏற்பாடு செய்து அனுபவிக்கிறோம்

என்பதால் தான் வழக்கிற்கு முன்பாக அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் அறிவிப்பு கொடுத்தார்கள் ஆனால் நாங்கள் 2005 ல் இருந்து அனுபவிக்கிறோம். வா.சா.ஆ .3 நான் கொடுத்த பதில் அறிவிப்பு தான். எங்கள் அறிவிப்பில் வாதியின் தந்தை பெயரில் உள்ள சொத்துக்களை முறையாக பதிவு செய்து கொடுக்கவிலலைஎன்றால் நீதிமன்றம் மூலம் ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்வோம் என்று சொல்லி உள்ளேன். இதுநாள் வரை நான் வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் போட்ட வழக்கில் பதில் போட்டுள்ளேன். பி.வா.சா.ஆ .7 உண்மையிலேயே ஏற்பட்டிருந்தால் வா.சா.ஆ. 3 ல் குறிப்பிட்ட படி சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் பி.வா.சா.ஆ .7 வழக்கிற்காக ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ .8 முத்து படையாட்சிக்காக நான் செலுத்திய ரசீதுகள் என்றால் சரிதான். 04.02.2021 ரசீது நான் செலுத்தியதுதான். 14.02.2024 உதையத்தம்மாள் பெயரில் நான் செலுத்தியதுதான். 27.03.2006 ல் என் தம்பி கண்ணன் செலுத்தியது. என் தம்பியுடன் ஒரே குடும்பமாக வசித்து வருவதாகவும், எனக்காக என் தம்பி வரி செலுத்தியதாகவும் வழக்கில் சொல்லவில்லை. 29.03.2008 ரசீதில் பட்டா எண். 556 என்றுள்ளது என்றாலும் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. 06.02.2009 ல் பட்டாஎண். 152 என்று உள்ளது. அது என்னுடைய தனிப்பட்ட சொத்து. 03.02.2022 ல் உதையத்தம்மாள் பெயரில் நான் செலுத்தியதாக உள்ளது. 11.04.2007 ல் கண்ணன் செலுத்தியதாக உள்ளது. 04.02.2025 ல் நான் செலுத்தியதாக உள்ளது. தாவா சொத்து என் வசம் இருந்தால் புதிதாக ரசீது போடவேண்டிய அவசிம் இல்லை என்றால் சரியல்ல பி.வா.சா.ஆ .8 ன் மூலமாக 2008 ல் இருந்து சொத்து என் அனுபவத்தில் இருந்ததாக காட்டவில்லை என்றால் சரியல்ல. 14.02.2025, 09.11.2022, 2020, 16.02.2024, 11.11.2024 ரசீது ஆதிமதி என் மனைவி பெயரில் உள்ளது. 27.07.2024, 14.02.2025 11.11.2024, 04.11.2023, 10.02.2023, 11.10.2021, 2020, பி.வா.சா.ஆ .9 வரிசையில் உள்ள ஆவணம் எதுவும் 2020 க்கு முன்பு செலுத்தியதாக இல்லை என்றால் ஆன்லைனில் செலுத்தி உள்ளோம். பி.வா.சா.ஆ .9 வரிசையில் செலுத்த கூடிய சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.9 கை ரசீதுகள். ஒரு ரசீதில் தேதி குறிப்பிடவில்லை என்றால் முத்திரை உள்ளது தேதி இல்லை. 12.02.2012 ஆதி மணி பெயரில் உள்ளது. அதில் சர்வே வெ எண் இல்லை. 13.12.2013 ல் என்

பெயரில் உள்ளது. என் மனைவி மற்றும் என் பெயரில் உள்ளது TVLM என்றுள்ளது. 12.12.2012 சர்வே எண்ணில் இல்லை. 13.12.2013 ல் சர்வே எண் இல்லை. 14.12.2015 என் பெயரில் உள்ளது. 20.11.2017 என் பெயரில் உள்ளது. 20.11.20217 என் மனைவி பெயரில்உள்ளது, 13.11.2014 என் மனைவி பெயரில் உள்ளது மற்றொரு ரசீது என் பெயரில் உள்ளது. 15.12.2010 எஸ்.பி.கே என்றுள்ளது. 13.12.2014 எஸ்..பி.கே என்றுள்ளது. மேமாத்துார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எனக்கு ஒரு கணக்கு என் மனைவிக்கு ஒரு கணக்கு உள்ளது. என் கணக்கு எண் நினைவில்லை. 1012, 608, கணக்கு எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு ரசீதில் கணக்கு என் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ளது மேமாத்துாரில் உள்ளது, திருவிளையாட்டம் கூட்டுறவு ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. மேமாத்துார் கூட்டுறவு வங்கியில் காப்பீடு செலலுதி வந்ததாக வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை. பி.வா.சா.ஆ. 9 தனிப்பட்ட சொத்து என்றாலும் வழக்கிற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் குடும்ப சொத்து என்பதால் வாதிகளுக்கு பாகம் உண்டு என்றால் சரியல்ல. வாதிகள் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் பாகம் பிரிக்கவிலலைஎன்றாலும் தாக்கல் செய்த ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றாலும் அதன் மூலமாக எந்த பலனும் கிடைக்க கூடியது அல்ல என்றாலும் நானும்,3 ம் பிரதிவாதியுடன் 1 ம்பிரதிவாதியுடன் வஞ்சக கூட்டு சேர்த்து வழககு நடத்தி வருகிறோம்எ ன்றால் சரியல்ல. அதனால் தான் நாங்கள் தனித்தனிதே கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவா படி தீர்வாக வேண்டும் என்றால் சரியல்ல.